தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 14, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 மார்ச் 28, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள் - விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள். வினா எண் 121, திரு. அன்பில் பெரியசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

121—

புறவழிச் சாலை

***2515—திரு. அன்பில் பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட பேருந்துகளும் திருச்சிராப்பள்ளி நகர் வழியாக பிற மாவட்டங்களுக்குச் செல்வதால் திருச்சிராப்பள்ளியில் நெரிசலைத் தவிர்க்கப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சி மாநகரத்தில் ஏற்கெனவே புறவழிச் சாலை அமையப்பெற்றுள்ளதால் புதிதாக புறவழிச் சாலை அமைக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1999 ஆம் ஆண்டு அன்றைக்கு தி.மு.க. ஆட்சியிலே, மறைந்த மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களும், அன்றைக்கு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த அன்புமிகு அண்ணன் நேரு அவர்களும், அன்றைக்கு திருச்சி-2-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த மறைந்த அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்களும், அன்றைக்கு 1-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இன்றைக்கு இருக்கின்ற அண்ணன் பரணிகுமார் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்துபேசி ஓர் ஆய்வை செய்து தமிழக அரசுக்கு அதை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பணி ஆட்சி மாற்றத்தால் நிறுத்தப்பட்டது. கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் மாண்புமிகு சிவசாமி அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு ஆய்வு செய்ய வந்தபோது இந்தத் திட்டத்தைப் பற்றி நான் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர் என்ற முறையிலே அவர்களிடம் முறையிட்டேன். அவர் அதற்கு, அரசிலே முறையிட்டு, இந்த திருச்சி மாவட்டத்திற்கு வாங்கித் தருகிறேன் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால், அப்போதிருந்த Local Plan-LPA சார்பாக, எங்களுக்கு ஓர் அறிக்கையைத் தந்தார்கள். அந்த அறிக்கையிலே திருச்சி மாவட்டத்திற்கு இந்த புற வழிச் சாலை தேவையில்லை என்று கூறி, அந்தத் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு மாற்றுவதாக இருக்கிறது என்று

குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து, திருச்சி மாவட்டத்திற்கு வரும் நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகரத்தில் புறவழிச் சாலை ஏற்கெனவே அமையப் பெற்றுள்ளது. இது தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் புறவழிச் சாலையில் பிற மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளும் சென்று வருகின்றன. அரசு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் புறவழிச் சாலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருத்துருவில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சியில் புறவழிச் சாலை அமைப்பதற்கான அவசியத்தினை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதை மறு ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொன்ன முதல் உறுப்பினர் நீங்கள்தான்.

வினா எண் 122, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

122—

கிராமச் சாலை

***18656-திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—